**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.233/2021**
**Prosecution Witness :1**

| | | | |
|---|---|---|---|
| Name | : சுப்புத்தாய் | Caste | : |
| Father 's Name / Husband Name | : பாண்டிதுரை | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(23.02.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது செட்டிபிள்ளையார்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். சுமார் 6 வருடத்திற்கு முன்பாக நான் ஆலம்பட்டி வீட்டில் இருக்கும் போது சில நபர்கள் எனக்கு போன் மூலம் தகவல் சொல்லி என் கணவருக்கு விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். நான் உடனடியாக திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அவர் பிணவறையில் வைக்கப்பட்டிருந்தார். அங்கு வந்த போலிசார் என்னிடம் புகாரில் கையெழுத்து பெற்றுக் கொண்டனர். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். புகாரில் உள்ள கையெழுத்தும் என்னுடையது தான். அந்த புகாரை யார் எழுதினார்கள் என்றால் நான் விபரம் சொல்ல சொல்ல போலிசார் எழுதினார்கள். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எப்படி விபத்து நடந்தது என்று எனக்கு தெரியாது. விபத்து ஏற்படுத்திய நபரையும் எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியையும் எனக்கு தெரியாது. போலிசார்என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

என் கணவரின் கவனக்குறைவால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியின் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்றாலும் சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை.

**மறுவிசாரணை**.இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.233/2021**
**Prosecution Witness :2**

| | | | |
|---|---|---|---|
| Name | : அமுதா | Caste | : |
| Father 's Name / Husband Name | : **பூ பாண்டி** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(23.02.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது ஆலம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். அ.சா.1 எனது அக்கா ஆவார். சுமார் 6 வருடத்திற்கு முன்பாக நான் ஆலம்பட்டியில் எனது அக்கா வீட்டில் இருக்கும் போது சில நபர்கள் எனக்கு போன் மூலம் தகவல் சொல்லி என் அக்கா கணவருக்கு விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். நான் உடனடியாக திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அவர் பிணவறையில் வைக்கப்பட்டிருந்தார். விபத்து நடந்த விபரம் எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. விபத்து ஏற்படுத்திய வாகனம் பற்றி தற்போது எனக்கு தெரியவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

என் அக்கா கணவரின் கவனக்குறைவால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியின்

கவனக்குறைவால் ஏற்படவில்லை என்றாலும் சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை.

**மறுவிசாரணை**.இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.233/2021**
**Prosecution Witness :3**

| | | | |
|---|---|---|---|
| Name | : **பூ பாண்டி** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **கொண்டப்பன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(23.02.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது ஆலம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கல்குவாரியில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அண்ணன் மனைவி ஆவார். அ.சா.2 எனது மனைவி ஆவார். சுமார் 6 வருடத்திற்கு முன்பாக நான் ஆலம்பட்டியில் கல்குவாரியில் வேலை செய்து கொண்டிருந்த போது எனது அண்ணனுக்கு விபத்து ஏற்பட்டதாக தகவல் கிடைத்து நானும் அ.சா.1,2 ஐ கூட்டிக் கொண்டு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு பிணவறையில் எனது அண்ணன் வைக்கப்பட்டிருந்தார். அங்குவிசாரித்த போது எனது அண்ணன் மீது அரசு பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாக கேள்விபட்டேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. சம்பவயிடத்திற்கு நான் செல்லவில்லை. விபத்து ஏற்படுத்திய ஓட்டுனரை எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

என் அக்கா கணவரின் கவனக்குறைவால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியின் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்றாலும் சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை.

**மறுவிசாரணை**.இல்லை